மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசீலனை பண்ணாமல் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும். அரசாங்கம் என்றால் பரிசீலனை செய்துதான் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையங்களைக் கட்டுவதற்காக ஆகக்கூடிய செலவுகள் பூராவையும் அந்த நகராட்சிகள் ஏற்றுக் கொள்வதற்குப் பணம் இல்லை என்று சொன்னால், அரசாங்கம் கடனாகவாவது, அல்லது மானியமாகவாவது கொடுக்குமா? பல இடங்களில், மாவட்டத் தலைநகரங்களில் பஸ் ஸ்டாண்டு சரியாக இல்லாமல் இருக்கிற காரணத்தினால், அதனால் ஏற்படுகின்ற அசௌகரியங்களை முன்னிட்டு, இந்த ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வளர்ந்து வருகின்ற ஜனத்தொகைக்குத் தக்கவாறு பஸ் நிலையங்களை எல்லாம் விரிவுபடுத்த வேண்டும் என்று நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே பணிகள் நடைபெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக எந்தெந்த நகராட்சிகளில் பணம் இல்லாமல் இருக்கின்றதோ அவைகளுக்கும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக கடன் வழங்கியாவது அவைகளைச் செய்ய முடியுமா என்பதற்காகத்தான் இந்தத் திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நகராட்சிகளாக இருந்தாலும் பேரூராட்சிகளாக இருந்தாலும் அவைகளுக்கும் கூட இதை விரிவுபடுத்துகின்ற வகையிலேதான் திட்டங்களை உருவாக்கி இருக்கிறோம்.

இராமநாதபுரம் மாவட்ட அனைத்து ஒன்றியங்களையும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளுதல்.

*வினா எண் 717—திரு. க. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தர்மபுரி மாவட்டத்தைப் போன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களையும் தன்னிறைவு திட்ட ஒன்றியங்களாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தர்மபுரி மாவட்டத்தில் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களை முதல் கட்டத்திலும் எட்டு ஒன்றியங்களை இரண்டாம் கட்டத்திலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன. அதே போன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களை முதல் கட்டத்திலும், பதிமூன்று ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாம் கட்டத்திலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன. மற்ற ஒன்றியங்களும் அடுத்து வரும் ஆண்டுகளில் சேர்க்கப்படும்.

1981 ஏப்ரல் 16]

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக கிழக்கு இராமநாதபுரம் என்பது எந்தவிதமான தொழிற் சாலைகளும் இல்லாத ஒரு பகுதியாகும். அந்தப் பகுதி வெறும் விவசாயத்தையே அதிலும் வானம் பார்த்து விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய ஒரு பகுதியாகும். ஆகவே கிழக்கு இராமநாத புரத்தின் அத்தனை ஒன்றியங்களையும் உடனடியாக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்வதாக அறிவிப் பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே மூலக்கேள்வி தர்மபுரி மாவட்டத்தைப்போல இராமநாதபுரம் மாவட்டத்தையும் முழுவதுமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை பற்றியதுதான். ஆனால் ஏற்கெனவே தர்மபுரி மாவட்டத்தில் 16 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவைகளில் இதுவரையில் 5 ஊராட்சி ஒன்றியங்கள் தன்னிறைவு அடைந்திருக்கின்றன. 8 ஊராட்சி ஒன்றியங்கள் இந்த ஆண்டிலே எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இன்னும் 3 ஊராட்சி ஒன்றியங்கள் பாக்கி இருக்கின்றன. அதேபோல் இராமநாதபுரம் மாவட்டத்தில் 32 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அதிலே 5 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 13 ஊராட்சி ஒன்றியங்கள் இந்த ஆண்டு எடுக்கப்பட்டிருக் கின்றன. மேலும் 14 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட வேண்டும். ஆனால் எந்த எந்த இடங்களில் உள்ள ஒன்றியங்கள் வறட்சிப் பகுதியாக இருக்கின்றதோ அதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் எடுத்துக்கொள்ளப்பட்ட பல பஞ்சாயத்துக்களிலே எந்த வேலைகளும் செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எதை எந்த எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய கேள்விதான் இது. அங்கே செய்யப்படுகின்ற பணிகளைப் பற்றி யெல்லாம் கேள்விகள் கேட்க வேண்டாம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்தில் 150 ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. ஆனால் சென்ற ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்கெனவே அவை காலம் கடந்து எடுத்துக்கொள்ளப்பட்டதன் காரணத்தால் இன்னும் வேலைகள் பாக்கி இருக்கின்றன. என்னுடைய ஊராட்சி ஒன்றியத்திலே கூட அந்த நிலைமை இருக்

கின்றது. மேலும் கடந்த 20 நாட்களாக அப்படியே வேலையை விட்டுவிட்டுச் சென்று விட்டார்கள். ஆகவே மேற்கொண்டு அந்த வேலையைத் தொடர்ந்து நடத்தி துரிதப்படுத்திக் கொடுப்பதற்கு என்ன ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, எடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்ட வேலைகள் 31-3-81-க்குள் முடிக்கவேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் ஒருசில இடங்களில் குறிப்பாக நீலகிரி போன்ற இடங்களில் இதுபோன்ற வேலைகள் தேங்கி இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் மீண்டும் காலக்கெடு கொடுத்து வேலைகளை முடிப்பதற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே எங்கெங்கு தேக்கநிலை ஏற்பட்டிருந்தாலும் அவைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாம்பாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம்

* வினா எண் 761- திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம் ஆலங்காயம் நெடுஞ்சாலையில் வவ்வால்-தோப்பு என்கிற புதூருக்கு போகும் சாலையின் குறுக்கே போகும் பாம்பாற்றின் மீது புதியதாகப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதை விரைவில் கட்டி முடிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை. (ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, நீண்ட நெடுங் காலமாக இந்தப் பாலம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஜவ்வாது மலையின் அடிவாரத்திலே உள்ள பகுதிகளிலே வாழ்கின்ற விவசாயிகள் மழைக் காலங்களிலே ஆற்றிலே வெள்ளம் வந்துவிடுவதன் காரணத்தால் தங்களுடைய விளை பொருட்களைக்கூட நகரங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து உடனடியாக அந்தப் பாலத்தினைக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்